யா.புலோலி, புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் இலண்டன் கிளை 'தினக்குரல்' பத்திரிகையுடன் இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப்போட்டியில் முதலாம் இடம்பெற்ற கட்டுரை. இதனை எழுதிய செல்வி லிங்கேஸ்வரி கனகரெத்தினம் வவுனியா/முஸ்லிம் மகாவித்தியாலய மாணவியாவார்.

இளம் சமுதாய சீரழிவிற்கு தற்கால திரைப்படங்கள் வகிக்கும் பங்கு

சினிமாத் திரைப்படங்கள் வேர் விட்டு விருட்சமாய் வளர்ந்து இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு மேலாகின்றன. சினிமா எனும் விருட்சமானது, துளிர்விட்டு, செடியாகி, மரமாகி, பூவாகி, காயாகி, பழமாகி இன்று உலகநாடுகள் எங்கும் தனது நிழலைப் பரப்பி நிற்கின்றது.

அந்தவகையில் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு, வாழ்வியல் அம்சங்களை எடுத்துக்கூறும் சாதனம் என்ற வகையில் சினிமா ஒரு இரசிக்கத்தக்க இரசாலாகவும், அனுபவிக்கத்தக்க குழப்மாகவும் இருக்கிறது.

சினிமா என்பது இருபதாம் நூற்றாண்டுக்கான புதியதொரு கலைவடிவம்; சுய வெளிப்பாட்டை விழைகிற இயக்குநர் ஒருவர் கையில் சினிமாவடிவமானது சக்தி வாய்ந்த கருவியாக இயங்கவல்லது. 1975 இல் இப்படி தொலைக்காட்சிப் பெட்டிக்குள் மக்கள் திரைப்படங்களில் உலாவரும் ஒவ்வொரு பாத்திரங்களும் கை, கால் அசைக்கும் பொம்மைகளாகவே காணப்பட்டன.

கிழிசை சினிமாவின் பிரதி பிம்பங்களின் குவிக்கப்பட்டிருக்கும் திரைப்பட அறிவினால் நாம் நம்முடைய சுயமான சிந்தனையையும், நமது கலாசார வாழ்வாதாரங்கள் பற்றியும் புரிதல்களைப் பெறமுடியாதவர்களாக இழுத்துச் செல்லப்படுகின்றோம். இது ஒருவகையான திரைப்பட படைப்பாளிகள் சார்ந்த நெருக்கடியான போராட்டம் தான்.

வளர்கின்ற சமுதாயத்திற்கு ஒரு நல்ல, முன்னேற்றமான, சிறந்த பண்புகளை வளர்க்கக்கூடிய சிந்தனையைத் தூண்டக்கூடியதாக அமையாது. 'வக்கிரமான செயல்களையும், சிந்தனைகளையும் தூண்டக்கூடிய மூன்றாந்தர திரைப்படங்களாகவே காணப்படுவது மிகவும் மன வேதனைக்குரிய விடயமாகும்.

இப்படியானதொரு மனப்போக்கு பல அறிஞர்கள் இடையே இருக்கிறது.

தமிழில் வருகின்ற தென்னிந்திய திரைப்படங்கள் நம் மூளையையும், மனதையும் அரிசுரிப்பதன் நோக்கம் நம் மிடமிருந்த பணத்தைச் சுரண்டுவதே. பணத்தை மட்டுமல்ல நம் மனோபாவத்தையும் யதார்த்தத்தை விட்டு நகர்த்தி வேறொன்றின் மேல் அக்கறை கொள்ளச் செய்வதென்பது சுயவாழ்வின்இருப்பை, சுய அடையாளத்தை இழந்துவிடுகின்றோம் என்பதாகும்.

ஆபிரிக்க திரைக்கலைஞன் 'ஹெய்லே கேரிமா' இது போன்ற நிலை கண்டு தான் இவ்வாறு எச்சரிக்கை செய்கின்றார்.

''நமது கலாசார வேர்களை ஆதிக்கக் கலாசாரங்களுக்காக இழந்துவிடுவது முற்றிலும் தன்னை இழப்பது போலாகும்.''

சினிமா கலாசாரத்தினால் நாம் நம் சுயங்களை இழந்து, தமிழினத்தின் வேர்களை மறந்து திரைப்படங்களின் எண்ணிக்கை, திரைப்படம் பார்ப்பவர்கள் ஆகிய மூன்று பிரிவிலும் சென்னைப் பிரதேசம் முதலிடம் வகிக்கிறது. திரைப்படம் பார்ப்பவர்கள் வரிசையில் இளம் சமுதாயத்தினரே முதலிடத்தைத் தட்டிச் சென்றுள்ளனர்.

இக்கால சினிமாத் திரைப்படங்கள் இளம் சமுதாயத்தினரின் மனதை மட்டும் பாதிப்பதில்லை. அவர்களின் நினைவுகளில், மனோபாவங்களில், நடை, உடை, பாவனைகளில், கலாசாரத்தில் மாற்றத்தை அல்லது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. ஆனால், நமக்கு முன் தினிக்கப்படும் இக்கால தமிழ் சினிமாவின் வியாபார சூத்திரத்தினால திரைப்படச் சக்கைகளினால் இளம் சமுதாயம் பாரிய திருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. உதாரணமாக, 'சிவாஜி' திரைப்படம்.

இன்றைய சினிமாத்திரைப்படங்களானது மம்பரம் விளையாடுவது, பட்டம் விடுவது, சீட்டு ஆடுவது போன்ற வெறும் பொழுதுபோக்குச் சாதனமாவே தொழிற்படுகின்றன.

சுதந்திர தினத்தன்று மட்டுமல்ல, காந்தி ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி, விஜயதசமி, பொங்கல், தீபாவளி எனத் தமிழர்கள், இந்துக்கள், இந்தியர்களின் சிறப்பு நாட்களிலெல்லாம் ''சிறப்புத் திரைப்படங்களையெல்லாம் பாருங்கள்' இந்நாளை சிறப்புடன் கொண்டாடுங்கள்'' போன்ற கைங்காரியங்களில் தமிழகத் தொலைக்காட்சிகள் ஈடுபடுகின்றன. எதிர்காலத்தில் அப்பர், சுந்தரர் குரு பூசைத் தினங்களில் கூட இவ்வானான திரைப்படங்களை கொடுத்து வைத்த இளம் சமுதாயத்தினர் பார்க்க முடியும். மகாத்மாகாந்தியடிகளும், புரான இதிகாசங்களும் காட்டிய வழிமுறை இதுதானோ?

அந்தளவிற்கு இளம் சமுதாயத்தினருடன் ஒட்டி உறவாடி ஒன்றோடொன்று கலந்து காணப்படுகின்ற இக்கால சினிமாக்கள். இளம் சமுதாயத்தினரை சீரழிக்கும் 'மசாலாத்தனமான' சினிமாத்துறையை வளர்ப்பதில் கங்கணங் கட்டிக் கொண்டு செயற்படுவதில் தொலைக்காட்சிகளே முக்கிய அங்கம் வகிக்கின்றன. இதற்கு இவர்களின் இலாபநோக்கே காரணம் என்பதை இளைஞர்களும் யுவதிகளும் அறிந்துகொள்ளாமல் தண்டவாளத்தில் தலைவைத்துறங்கும் நிலைக்குள்ளாகின்றனர்.

தற்போது தயாரிக்கப்படும் பெரும்பாலான திரைப்படங்கள் வன்முறை,ஆபாசம், காமக்காதல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே தயாரிக்கப்படுகின்றன. படங்களைப் பார்த்துப் பலர் குற்றங்களைச் செய்யத் துணியும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

(தொடரும்)

லிங்கேஸ்வரி கனகரெத்தினம்

கண்பதித்த போது நிஜமாகவே பொழுது பழுதில்லாமல் போனது உண்மை. முன்பெல்லாம் நல்ல கருத்துக்களை வலியுறுத்தவும், மனிதன் ஒய்வு நேரத்தை மகிழ்சியாகக் களிக்கவும் திரைப்படங்கள் எடுக்கப்பட்டன.

பின்னர் குடும்ப வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைப் புகுத்தும் வகையில் படங்கள் உருவாக்கப்பட்டன. காலப்போக்கில் வெளிநாட்டுக் கலாசாரம் மெல்ல மெல்ல திரைப்படங்களில் தலைகாட்ட ஆரம்பித்தது. சிலர் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மட்டுமே திரைப்படங்கள் தயாரிக்க ஆரம்பித்தனர். அன்றிலிருந்து சினிமாவின் தரமும் குறைந்தது.

ஆரம்பத்தில் எல்லோரும் நன்கறிந்த கதைகளாகவே தான் திரைப்படத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. புதிதாக எழுதப்பட்டாலும் அவை கதை மரபுகளோடு மட்டுமே அமைக்கப்பட்டன. ஊமைப்படம் பேசும்படமாக மாறிய போது, அபார கேள்வி எற்பட்டது. முதலில் ஜனங்களும் பாரபட்சமின்றி எல்லாவற்றையும் வரவேற்றார்கள். ஆனால் போகப் போகத் ஒரு பாரிய விடயமாகக் காணப்படுகின்றது.

எமது கலாசாரமும், பண்பும் பேணிப்பாதுகாப்பதற்காகத்தான் அன்று கலைகள் உருவாக்கப்பட்டன. ஏதாவது நல்ல கருத்துக்களை மையமாக வைத்தேநாடகம், சுத்து போன்ற பல கலைகள் காணப்பட்டன. ஆனால், இன்று நடப்பது என்ன? வெளிவருகின்ற சகல திரைப்படங்களும் வளர்கின்ற சமுதாயத்தை முளையிலே கிள்ளி எறியக்கூடிய வக்கிரமான கருத்துக்களையே மிகவும் விரிவுபடுத்தி விபரமாகக் காண்பித்துக் கொண்டிருக்கின்றன. (பில்லா)

சமுதாயத்தின் சீர்கேட்டுக்கும், இளையதலைமுறையினர் தறிகெட்டுப் போவதற்கும் இத்திரைப்படங்கள் காரணமாக அமைகின்றது என்பதை பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் இதற்கான மாற்றுவழி என்னவென்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

'சினிமா சத்து இல்லாத ஒன்று'. உலக அரங்கில் சினிமா ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகாலம் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்ற போதிலும், பார்ப்பணகருத்தியல்களின் முன் அடிமைப்பட்டு, குல தெய்வங்களை மறந்து இரவிவர்மன் வரைந்த புராண இதிகாச பெரும் கற்பனை கடவுள்களின் பிரேரிப்பட்ட ஓவியங்களை தெய்வங்களாக நம் வீட்டு பூஜை அறைகளில் வழிபடுகின்றோம். இந்தப் பூஜை அறைகளில் இருளிலிருந்து தொடங்குகின்றது. நமது கலாசார அரசியல். இந்தக் கலாசார கடவுள் அரசியலின் பின்னணியில் தமிழ்த்திரைப்படத்தின் பார்ப்பணிய கருத்தியல்களையும் நாம் புரிந்து கொள்கிறோமா? இல்லை. சினிமாவின் வசீகர மாயையில் பொழுதுபோக்கு, களியாட்டம் என்று திரைவெளிகளில் முன் நமக்கு நம்மையறியாமல் தினிக்கப்படும் ஆதிக்க, சாதி கருத்தியல்களை அறியாமல் நகர்ந்து போகின்றோமா? என்பது குறித்து சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

இன்றைக்கு தமிழ்த்திரைப்படங்களை வெளிநாட்டவர் பார்க்க நேர்ந்தால் தமிழைப் பற்றிய அவர்கள் எண்ணம் நம்மைத் தலைகுனிய வைப்பதாக இருக்கும்.

ஒவ்வொரு நாளும் இலட்சக்கணக்கான தமிழர்கள் தங்கள் நேரத்தையும், பொருளையும் செலவிட்டுத் திரைப்படம் பார்க்கிறார்கள். இதில் இளம் சமுதாயமே முக்கிய அங்கம் வகிக்கின்றது. பம்பாய், கல்கத்தா, சென்னை என்ற மூன்று திரைப்படக் கேந்திரங்களில் இன்று

சுய கணிப்பை உயர்த்துதல்



ஒருவரைப் பார்த்து நாங்கள் ''நீங்கள் யார்?'' என்று கேட்டால் அதேகமாக அவர் தன் பெயரைக் கூறுவார். திரும்பவும் அதே கேள்வியைக் கேட்டால் ஒருவேளை தனது தந்தையின் பெயரைக் கூறுவார். ஆயினும் இதே கேள்வியை நூறு முறை கேட்டால் அவர் கூறும் பல விடையங்கள் அவரது 'சுய கணிபை' வெளிப்படுத்தும்.

ஒருவர் தன்னைப் பற்றி தானே உருவாக்கிக்கொள்ளும் அல்லது உணரும் நம்பிக்கையும் பெறுமதியுமே சுயகணிப்பு எனப்படும். ஒருவரது எண்ணங்கள், உணர்வுகள், நடத்தை என்று அனைத்திலும் இந்தச் சுய கணிப்புச் செல்வாக்குச் செலுத்தும்.

ஒருவர் தனது நன்னிலை பற்றி உணர்வதில் முக்கிய கூறாக விளங்குவது இந்தச் சுயகணிப்புதான். உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் சமூகரீதியாகவும் ஒருவர் நன்றாக இருப்பதான உணர்வு சுயகணிப்பில் இருந்து எழுவதாகவே இருக்கிறது.

இந்தச் சுயகணிப்பு ஒரு நிமிடத்தில் அல்லது ஒரேநாளில் திடீரென்று வந்து சேரும் ஒன்றில்லை. ஒருவர் பிறந்த காலத்திலிருந்து அவரது குழந்தைப் பருவம், பிள்ளைப்பருவம், கட்டிளமைபருவம் இவற்றினூடாக மெல்ல மெல்ல வளர்ந்து வருவது. ஆகவே தான் ஒருவருடைய வாழ்வின் ஒவ்வொரு பருவத்திலும் நடைபெறும் சம்பவங்கள் ஒவ்வொன்றும் முக்கியமானவையாக இருக்கின்றன.

எங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது போன்ற செய்திகள் எமக்குப் புறத்தே இருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். அதேநேரம் எங்களுடைய தோற்றம், நுண்மதி, செயற்றிறன், புகழ், கவர்ச்சி, உடல்நலம், உளநலம், வலிமை, சமூக அக்கறை, உணர்வுகள், நடத்தைகள் பற்றி நாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயம் அகத்தே இருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். புறத்தே இருந்து வரும் செய்திகளைவிட எமக்குளே இருந்து எங்களைப் பற்றி வரும் செய்திகள் மிக முக்கியமானவை. அவைதான் உண்மையானவையும்கூட. உலகம் முழுவதுமே ஒருவரைப் பெரியவர் என்று கூறலாம். ஆனால், உண்மையில் அவர் பெரிய மனிதர் தானா என்பது அவருக்குத்தான் தெரியும். சிலவேளை ஏனையோர் எங்களைப் பாராட்டும் போது அந்தப் பாராட்டை ஏற்பது எங்களுக்குக் கஷ்டமாக இருப்பதை நாம் உணர்ந்திருப்போம். நாங்கள் உண்மையில் யார் என்பதில் இருந்தே சுய கணிப்புக் கட்டி எழுப்பப்படுகிறது எங்களுக்கு எங்களைப்பற்றி ஒரு உயர்ந்த சுயகணிப்பு இருக்கும் போது எங்களால் தவறுகளை ஏற்றுக்கொள்ள முடியும். அதே நேரத்தில் எமது செயற்பாடுகளுக்குப் பொறுப்பு ஏற்கவும் முடியும்.

எமது சுயகணிப்பு உயர்வாக இருக்கும்போது நாங்கள் எங்களை விரும்புவோம். எங்களை நாங்கள் காதலிப்போம். எங்களை நாங்கள் காதலிக்கும்போது மற்றைய உயிர்களுக்குத் தீமை செய்வது கடினமாகும்.

''தன்னைத் தான் காதலனாயின் எனைத் தொன்றும் துன்னற்க தீவினைப்பால்''

என்று வள்ளுவர் கூறினார். எமது சுயகணிப்பு உயர்வாக இருக்கும்போது நாம் எந்தெந்தத் துறைகளில் தோச்சி பெற்றிருக்கிறோம் என்பது எமக்குத் தெரியும். அதேநேரம் புதிய துறைகளைக் கற்றுக் கொள்ளும் விருப்பம் எங்களிடம் இருக்கும். வளர்ச்சி நோக்கிய மாற்றங்களுக்கு நாம் எப்போதும் ஆயத்தமாக இருப்போம். புதிய முயற்சிகளில் தோல்வி வரலாமாயினும் நல்ல சுயகணிப்பு உள்ளவர் அது பற்றித் தயக்கம் காட்டுவதில்லை. ஏனைய மனிதர்களுடனான இவர்களது உறவு பொதுவாக ஆரோக்கியமாக இருக்கும். பெரிய மேதைகளாக, ஞானிகளாக, கவிஞர்களாக, கலைஞர்களாக உயர்பவர்கள் சிறுவயதில் இருந்தே உயர்ந்த சுயகணிப்புக் கொண்டவர்களாக இருந்திருப்பதை அவதானிக்க முடியும்.

ஒரு ஊரிலே ஒரு துறவி மரத்தின் கீழே அமர்ந்திருந்தார். எளிமையான காவி உடை. வேறு சொத்து எதுவும் அவரிடம் இல்லை. நாள்தோறும் காலையும் மாலையும் ஆயிரக்கணக்கான மக்கள் அவரை வந்து பார்த்து வணங்கி ஆசி பெற்றுச் சென்றார்கள். அந்த நாட்டின் அரசன் தங்கம் பதித்த அரியணையில் உயர் மதிப்புள்ள ஆடை அணிந்து அரண்மனையில் அமர்ந்திருக்கிறான். ஒருசிலர் மட்டுமே அவனைப் பார்க்க வருகிறார்கள். அரசனுக்கு இது பொறுக்கவில்லை. அவன் நேரே துறவியிடமே சென்று கேட்டான், ''இதோ பாருங்கள். என்னிடம் எவ்வளவு செல்வம் இருக்கிறது. நினைத்ததைச் செய்யும் அதிகாரம் இருக்கிறது. எல்லா நாடுகளிலும் என் புகழ் பரவியிருக்கிறது. அப்படி இருந்தும் என்னை வந்து பார்க்காத மக்கள் இவை. எதுவுமே இல்லாத உங்களிடத்தில் ஏன் வருகிறார்கள்?'' துறவி சிரித்துவிட்டுச் சொன்னார், ''நீ, உன்னை என்னோடு ஒப்பிட்டுப் பார்க்கிறாய். நான் ஒருபோதும் என்னை உன்னோடு ஒப்பிட்டுப் பார்க்கவில்லை.''

இதற்கு எதிர்மாறாகத் தம்மைப் பற்றிய குறைந்த சுயகணிப்பு உள்ளவர்கள் மற்றவர்கள் தங்களை ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பர். தாங்கள் யார் என்பதைத் தமக்குள் இருந்து தேடாமல் வெளியே இருந்து தேடுவார்கள். அதனால் மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன கதைக்கிறார்கள் என்பது பற்றி அளவுக்கு அதிகமாக அக்கறை காட்டுவர். அதை அறிந்து கொள்வதற்கு உளவளிகளையும் வைத்துக் கொள்வர். தம்மைப் பற்றிக் குறைவாகக் கதைப்பவர்களைப் பழிவாங்கவும் இவர்கள் தயங்குவதில்லை. இவர்களுடைய சுயகணிப்பு என்பது ஒரு வெப்பமானியின் பாதரசக் கோடு போல மற்றவர்களின் துலங்கலைப் பொறுத்து ஏறி இறங்கிக் கொண்டிருக்கும். மற்றவர்களின் பாராட்டைப் பெறுவதற்காக எந்த ஆரோக்கியமற்ற செயற்பாட்டையும் செய்வதற்கு இவர்கள் தயங்குவதில்லை.

குறிப்பாக, இளைஞர்கள் தமது சுய கணிப்பை உயர்த்திக் கொள்வதற்காகவே பொருத்தமற்ற பாலியல் நடத்தைகளில் ஈடுபடுகிறார்கள். பாடசாலையை விட்டு இடைவிலகுகிறார்கள். வன்முறைகளில் இறங்குகிறார்கள். குற்றச் செயல்களைச் செய்கிறார்கள். பாரபட்சமாகச் செயற்படுகிறார்கள் அல்லது தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள். மதுபாவனை, புகைபிடித்தல், போதைப்பொருள் பாவனை ஆகியவற்றைக் குறைந்த சுயகணிப்பின் விளைவுகள் என்றே கருதலாம். தமக்குக் கிடைக்கும் நேரத்தில வாழ்வை சரிபபதற்குப் பதிலாகத் தம்மைக் குற்றமற்றவர்கள் என்று நிறுவுவதிலும் மற்றவர்களைக் குறை சொல்வதிலும் கழித்துக் கொண்டிருப்பர். வாழ்வில் வரும் புதிய சவால்களை இவர்கள் சந்திக்கத் தயங்குவர். இவர்களுக்குத் திருப்தியான நண்பர்கள் இருக்க மாட்டார்கள். தங்களைப் பற்றி அதிகமாகப் புழுகிக் கொள்பவர்களாயும் மற்றவர்களைப் புண்படுத்தி அல்லது பயமுறுத்திக் கதைப்பவர்களாயும் இவர்கள் காணப்படுவர். வாழ்வின் நச்சு வட்டங்களில் அகப்பட்டுத் தத்தளிப்பர். தம்மால் வெற்றி பெற முடியாது என்று இவர்கள் நம்புவதால் முயற்சி செய்வதில்லை. முயற்சி செய்யாதிருப்பதால் இவர்கள் வெற்றி பெறுவதில்லை.

அப்படியானால் சுயகணிப்பை உயர்த்துவதற்குப் பொருத்தமான வழிகள் எவை? பொருத்தமான சந்தர்ப்பங்களில் எல்லாம் மற்றவர்களுக்கு உதவுதல் ஒரு வழி. ஒருவர் மனதார ரசிக்கின்ற விடயங்களைக் கண்டு கொண்டு, அவற்றைச் செய்வதற்கு நேரத்தைக் கண்டு கொள்ளுதல் இன்னொரு வழி. வெற்றி பெறும் உணர்வைத் தருகின்ற நிகழ்வுகளை இளம்கண்டு அவற்றைச் செய்தல் மற்றொரு வழி. விடயங்கள் ஒவ்வொன்றையும் சிறப்பாக்குவதை இலக்காகக் கொண்டு செயற்படலாம். ஆனால், இலட்சிய நிலைகளை இலக்காகக் கொள்ளத் தேவையில்லை. எங்களைச் சுற்றி, எமக்கு ஆதரவு தரக்கூடிய மனிதர்களின் வலைப்பின்னல் ஒன்றை உருவாக்கிக் கொள்ளலாம். வாழ்வு ஒரு போட்டி என்று நினைப்பதைத் தவிர்த்துக்கொண்டு, தவறுகளையும் பிழைகளையும் சுற்றலுக்கான சந்தர்ப்பமாகப் பாவித்துக் கொள்ள வேண்டும். எங்களிடம் காணப்படும் முன்னேற்றங்களுக்கு நாமே பரிசும் பாராட்டும் வழங்கிக் கொள்ளலாம். சுயகணிப்பை உயர்த்தக் சுற்றுக்கொண்டு விட்டால் மனச் சோர்வு எம்மைக் கிட்டவும் அணுகமுடியாது.